பாண்டியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

18—

ஆரம்ப சுகாதார நிலையம்

***47110—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், சிவநாடனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11–15

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கீழப்பாவூர் ஒன்றியம், சிவநாடனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கின்றார். இன்றைக்கு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாய் உள்ளத்தோடு உருவாக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய Amma Mini Clinic *திட்டம், அவர் கோரிய சிவநாடனூர் கிராமத்திலேயே அவரால் துவக்கி வைக்கப்பட்டிருக்கின்றது என்ற நல்ல செய்தியை இந்த அவையில் நான் பதிய வைக்க விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.*

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வாழ வைத்த இரு தெய்வங்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி*

2021 பிப்ரவரி 5]

அம்மா ஆகியோரை வணங்குகிறேன். அம்மா அவர்களுடைய அரசினை இன்றைக்கு சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கக்கூடிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அவரோடு உற்ற துணையாக இருக்கக்கூடிய தமிழகத்தினுடைய துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். அது என்னுடைய சொந்த ஊர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் அந்த ஊரில் முதலமைச்சர் அவர்களுடைய Amma Mini Clinic *ஏற்கெனவே துவங்கப்பட்டு ஒரு நாளைக்கு 150 நோயாளிகள் அங்கு பயன்பெற்று வருகின்றார்கள் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

கீழப்பாவூர் ஒன்றியப் பகுதியில் சுரண்டை பேரூராட்சி அமையப்பெற்றுள்ளது. சுரண்டை பேரூராட்சி சுமார் 40,000 மக்கள்தொகை மற்றும் 18 வார்டுகளைக் கொண்ட ஒரு பெரிய பேரூராட்சி. அந்தப் பேரூராட்சியில் 1990 ஆம் ஆண்டு முதல் அரசு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. மேலும், அந்தப் பேரூராட்சியில் 10–க்கும் மேற்பட்ட தனியார் மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. அந்தப் பேரூராட்சியின் பிறப்பு கணக்கின்படி ஒரு மாதத்திற்கு சுமார் 300 முதல் 350 பிரசவங்கள் வரை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஒரு மாதத்திற்கு 15 பிரசவங்கள் அதாவது இரண்டு நாளைக்கு ஒரு பிரசவம் என்ற முறையிலும், ஒரு நாளைக்கு புறநோயாளிகள் (out patient) *150 என்ற முறையிலும், உள்நோயாளிகள்* (inpatient) *5 என்ற முறையிலும் வந்து செல்லக்கூடிய வகையில் அந்த கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமையப்பெற்றுள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இன்னும் ஒரு கேள்வி இருக்கின்றது, சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: *இங்கிருந்து மேல்சிகிச்சைக்குச் செல்ல வேண்டுமென்றால், 10 கி.மீ. தூரத்தில் இருக்கின்ற பாவூர்சத்திரம் அல்லது 25 கி.மீ. தூரத்தில் இருக்கக்கூடிய தென்காசி தலைமை மருத்துவமனைக்கும்தான் செல்ல வேண்டிய நிலை இருக்கின்றது. ஏற்கெனவே இந்தப் பகுதியில்* Taluk *மருத்துவமனை இருந்தாலும்கூட, சுரண்டை அரசு*

கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்டம் சாரா (Non–Taluk) மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் சுரண்டை, பாடியனூர், கடம்பனூர் ஆகிய மூன்று கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. அவர் குறிப்பிட்டதைப்போல் பிரசவத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு தமிழ்நாட்டில் 100 சதவிகிதம் hospital delivery; அதாவது பிரசவங்கள் 100 சதவிகிதம் மருத்துவமனையில் நடக்கக்கூடிய ஒரே மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்றுதான். இது மிகவும் முக்கியமான விஷயம். இன்னும் கூடுதல் விஷயம் என்னவென்றால், அந்த 100 சதவிகிதத்தில் 62 முதல் 70 சதவிகிதம் வரை பிரசவங்கள் அரசு மருத்துவமனைகளில் நடைபெறக்கூடிய மாநிலம் தமிழ்நாடுதான். இந்தியாவில் நம்மைவிட வளர்ந்த மாநிலம் என்று சொல்லக்கூடிய பெரிய மாநிலங்களில்கூட அரசு மருத்துவமனைகளில் 30 சதவிகிதம்தான் delivery நடக்கின்றது, 70 சதவிகிதம் delivery தனியார் மருத்துவமனைகளில்தான் நடக்கின்றது. மருத்துவமனைகளில் பிரசவங்கள் அதிகமாக நடைபெறுவதற்குக் காரணம், முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம், Amma Maternity Nutrition Kit திட்டம், Amma Baby Care Kit திட்டம் என பல விஷயங்கள் இருக்கின்றன. அவர் சொல்லக்கூடிய சுரண்டை பகுதியில் வரும் காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை அரசு மிகுந்த கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கை கனிவோடு பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர்

2021 பிப்ரவரி 5]

அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அதே கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் வி.கே. புதூர் கிராமம் அமைந்துள்ளது. அங்கே அரசு மருத்துவமனை 1989 ஆம் ஆண்டிலிருந்து கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வந்தது. இப்போது 2017 ஆம் ஆண்டு முதல் அரசு ஆணைப்படி வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகின்றது. அது செயல்பட்டு வருகின்றதே தவிர, மற்றபடி அதனுடைய உட்கட்டமைப்பெல்லாம் மேம்படுத்தப்பட வேண்டிய நிலையில் இல்லை. ஏனென்றால், நம்முடைய அரசு அதற்கு ஒன்றரைக் கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து, கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுக் காலமாக அதற்கான இடங்களைத் தேர்வு செய்வதில் அதிகமான குழப்பங்கள் நிலவி வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் பல முறை சென்று நான் கோரிக்கை விடுத்துள்ளேன். வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அருகில் மூன்றரை ஏக்கர் நிலம் வருவாய்த் துறையிடம் இருக்கின்றது. ஏனென்றால் அந்தப் பகுதியில் உள்ள நிலங்கள் அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கு நிலம் தேர்வு செய்வது என்பது மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினையாக உள்ளது. இதற்கு ஒரே வழி வட்டாட்சியர் அலுவலகத்தின் அருகே அமையப் பெற்றுள்ள 3 ஏக்கர் நிலத்தை மருத்துவத் துறையின் சார்பாக வருவாய்த் துறையிடம் அழுத்தம் கொடுத்து, அந்த நிலத்தில் அரசு மருத்துவமனையைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்ற தாழ்மையான வேண்டுகோளை வைக்கின்றேன். எனவே, இதனைச் செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் கேள்வி கேட்டு, அந்தக் கேள்விக்கு பதில் சொல்லக்கூடிய வாய்ப்பு வருவதற்குள்ளாகவே அந்தக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்கிற அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அம்மாவினுடைய அரசு. இந்தக் கோரிக்கை குறித்தும் வருவாய்த் துறையுடன் இணைந்து அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்*

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

"காகிதமில்லா சட்டமன்றம்" என்னும் இலக்கினை எய்திடும் வகையில் பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள், ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள், ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது அனுமதிக்கப்பட்ட திருத்தங்கள் ஆகியவை உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. காகிதமில்லா சட்டமன்றம் என்னும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தொடர்ச்சியாக இன்றைய 5–2–2021 நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அவைமுன் வைக்கப்பெறும் ஏடுகளில் ஆ–வில் வரிசை எண்கள் 25 முதல் 35 வரையுள்ள 11 அறிவிக்கைகள் மற்றும் வரிசை எண்கள் 36 முதல் 46 வரையுள்ள 11 ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள் ஆகியவற்றின் மென்பொருள் வடிவம் PDF முறையில், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும் என்பதை பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது அனுமதிக்கப்பட்ட திருத்தங்களின் மென்பொருள் வடிவம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதை பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்குறிப்பிட்ட அறிவிக்கைகள், ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள் மற்றும் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது அனுமதிக்கப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின் பத்து பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக